மலர் : ௬ இதழ் : ௨

E - ISSN 2456 - 5571

சீர்மிகு

# வளர் தமிழ் ஆய்வு

## (பன்னாட்டு ஆய்விதழ்)

யாதும் ஊரே

யாவரும் கேளிர்

முதன்மைப் பதிப்பாசிரியர்

முனைவர் சி. மைக்கேல் சரோஜினி பாய்

வளர் தமிழ் ஆய்வு மன்றம்

திண்டுக்கல்

2022

40. சௌ.மோதிலால் நேரு
வருங்காலச் சந்ததியினருக்கான கள ஆய்வு மனிதநேயப் பாதை 146

41. சி.மைக்கேல் சரோஜினி பாய்
குடும்ப வன்முறை: பதிவும் தீர்வும் தியாகபூமி நாவலை முன்வைத்து 151

42. சி.யசோதா
சூழலியற் பண்பாட்டு ஆய்வு நோக்கில் திருக்குறள் 155

43. மோ. யுவராஜ்
வேதாத்திரியத்தில் பாலியல் சமன்பாடுகள் 158

44. பா.ரதிதேவி
சங்க இலக்கியங்களில் கையறு நிலை 161

45. பா. ரம்யா
பரதவர்களின் தொழிற்கருவிகள் 165

46. ரா.ரமேஷ்
எஸ்.அர்ஷியாவின் 'மொய்' சிறுகதையில்
'தாய்மாமனின் சீர்வரிசை' குறித்த பதிவுகள் 171

47. த.ரவிசந்திரன்
'சிறுஇசை' வழி வண்ணதாசனின் இயற்கைச் சூழல் 175

48. க.ராமசாமி
கோஹா : உலகின் முதல் திறந்த மூல நூலக மேலாண்மை மென்பொருள் 178

49. கா. ராஜேஷ்
பாரதியார் கட்டுரைகளில் வெளிப்படும் பெண் விடுதலைக் குறிப்புகள் 182

50. ந.ராஜேஸ்வரி
வேதாத்திரி மகரிஷியின் "ஆசை சீரமைத்தல்" 186

51. அ. ராஜன்
பெருமாள் முருகனின் கங்கணம் புதினம் விவாதிக்கும்
திருமண ஏக்கங்களும் கள யதார்த்தங்களும் 188

52. சு.ரேணுகா
"கண்ணகியின் சினம்"- வழக்குரை காதையிலும்
கொங்கைத் தீ நாடகத்திலும் - ஒப்பீடு 192

53. நா. ரேணுகா
தாமோதரமும் சாமிநாதமும் 195

54. க.ரேவதி
மண்ணும் மனிதர்களும் 199

55. க. லதா
பாரதியின் பாடல்களில் வானியல் 202

56. ப.லிங்கம்
நாலடியார் நவிலும் நிலையாமை 206

57. சு.லோகிதா
பாவாணரின் கருத்து வெளிபாட்டு உத்தி 210

58. அ.வளர்மதி
அகத்திணைக்கொள்கைகள்-ஒரு பார்வை 213

59. வாசுகி ஜெயரத்னம்
ஓஷோவின் கருத்தியலில் பெண்-அதிகாரப்படுத்துதல் 218

# பாரதியின் பாடல்களில் வானியல்

## முன்னுரை

அண்ட வெளியில் நின்று கொண்டு தன் விசாலப் பார்வையால் விண்ணையும் மண்ணையும் விழுங்கியவர் மகாகவி பாரதியார். பன்முகம் கொண்டவர். மானுடம் பாடியவர். தமிழ் இலக்கிய உலகில் மிக முக்கியமான மாற்றங்களுக்குக் காரணமானவர். முற்போக்குக் கவி. மரபுக் கவிதைகளும் படைத்து நவீனக் கவிதைகளையும் தமிழ் கூறு நல்லுலகிற்கு அறிமுகம் செய்தவர். தான் வாழ்ந்தபடியே கவிதை எழுதியவர். எழுதியபடியே வாழ்ந்தவர்.

அவர் அறிந்த பொருள்களில் ஆழங்காற் பட்டதினால் உள்ளபடியே அவற்றை உலகோருக்கு உணர்த்தியவர். தன் அறிவினால் தான் அறிந்த அனைத்தையும் தன் படைப்புகள் வழியே மக்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்னும் உணர்வால் உரைத்தவர். சமூக மாற்றத்திற்கான தேடலையும் ஞானத்திற்கான தேடலையும் ஒருங்கே கொண்டவர். உலக அரசியலைத் தமிழக மக்கள் அறியும்படி செய்தவர். பருப்பொருட்களையும் நுண்பொருட்களையும் உற்று நோக்கி அறிவியலுண்மை தெளிந்ததற்கு அவருடைய படைப்புகளே சான்று பகர்கின்றன. 'சொந்தச் சகோதரர்கள் துன்பத்தில் சாதல் கண்டும் சிந்தை இரங்கா' நடிப்புச் சுதேசிகளுக்கிடையே, எந்தத் தனிமனிதனும் பட்டினி கிடந்து அழிய மனம் ஒப்பாதவர். மண்ணில் மக்களின் நிலை கண்டு வெம்பும் அதே சமயம் காற்றையும் விண்ணையும் சாடும் திறன் கொண்டவர். அவர் வாழ்ந்த காலகட்டத்தில் உலக நாடுகளில் நடந்த போராட்டங்களை, அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியினைக் கவனித்த அவர் தன் படைப்புகளில் அவற்றைப் பதிவு செய்தார்.

"புத்தம் புதிய கலைகள் - பஞ்ச

பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்" *(பாரதியார் கவிதைகள், ப. 86)*

மேன்மைக் கலைகள் தமிழில் இல்லை என்று பேதை கூற்றாகக் கூறும் மகாகவி, அறிவியல் தொழில் நுட்பங்கள் அனைத்திலும் தமிழர் மேன்மை பெற வேண்டும் என்று தான் 'பாரததேசம்' என்ற தலைப்பில்,

"காசிநகர்ப் புலவர் பேசும் உரைதான்

காஞ்சியில் கேட்பதற்கோர் கருவி செய்வோம்" *(பாரதியார் கவிதைகள், ப. 29)*

எனப் பாடியுள்ளார். ஆயுதமும் காகிதமும் ஒருங்கே உருவாக்க வேண்டும் என்பதே அவருடைய விருப்பம். தொழில் நுட்பக் கல்வியிலும் இலக்கியக் கல்வியிலும் தமிழகம் ஒன்று போல வளர வேண்டும் என்பது இதன் பொருள். தன் கட்டுரை ஒன்றில் (உயிரின் ஒலி) செடியின் நாடியுணர்ச்சிக்கும் இதர மனுஷ்ய, மிருக ஜாதி ஜந்துக்களின் நாடியுணர்ச்சிகளுக்கும் பேதமில்லை' என்பதை ஜகதீஷ் சந்திரபோஸ் என்ற தாவரவியல் அறிஞர் நிறுவிய அறிவியலுண்மையைப் பதிவு செய்துள்ளார்.

இந்தியநாட்டு வேதங்களும் உபநிடதங்களும் நம் முன்னோரின் வானியல் அறிவினை எடுத்தியம்புகின்றன.

மைம்மீன் புகையினும் தூமம் தோன்றினும் *(புறம். 117)*

வானூர் மதியம் சகடு அணைய *(சிலம்பு. மங். 50)*

விண்ணூர்பு திரிதரும் வீங்குசெலல்
மண்டிலத்து முரண்மிகு சிறப்பிற் செல்வனொடு நிலைஇய
உரோகிணி நினைவனள் *(நெடுநல்வாடை 161-163)*

---

முனைவர் க. லதா, பாத்திமா கல்லூரி, மதுரை


E-ISSN 2456-5571